**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் - 2021**

**…………………………………………………**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

**..........................................................................................................**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த

வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டிற்கான உள்ளபடியான காசு வெளிப்பாய்ச்சலையும் உள்ளபடியான காசு உட்பாய்ச்சலையும் கருத்தில் கொள்ளாது நியமத்திற்கு முரணாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| i. ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் என்பவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,237,220 தொகையான காசு உட்பாய்ச்சல் முதலீட்டுச் | மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட | நியமத்திற்கு இணங்க சரியாக கணக்கினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | வரியற்ற பணம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 35 ஆம் பிரிவின் பிரகாரம் இது சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | |
| (ii) | ஆண்டின் போது நடைபெற்றுவரும் வேலை (Capital Work in Progress) ரூபா 5,561,222 தொகை நடைமுறையற்ற சொத்துக்களாக மூலதனமாக்கப்பட்டிருந்தும் அதன் மூலம் காசு உட்பாய்ச்சலோ அல்லது காசு வெளிப்பாய்ச்சலோ இடம்பெற்றிருக்காத போதிலும் காசு உட்பாய்ச்சலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான நடைமுறை வேலைக் கணக்கின் மீதி முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும் ஆதனம், பொறி மற்றும் பொறிகளைப் பெற்றுக்கொள்ளலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப் பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்ததனால் முதலீட்டுச் செயற்பாடுகள் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iii) | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 136,086,521 தொகையான ஊழியர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 146,979,660 தொகையான ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அந்த காசு வெளிப்பாய்ச்சலும் காசு உட்பாய்ச்சலும் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ஊழியர் கடனை வழங்குதலும் மீள அறவீடு செய்தலும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்காலத்தில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| iv. | இரண்டு நிலையான வைப்புக்கள் தொடர்பாக முறையே ரூபா 51,473,087 மற்றும் ரூபா 257,248,540 தொகைகள் காசாக்கப்பட்டிருந்தும் அக்காசு பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்களில் பணத்தை முதலீடு செய்தல் மற்றும் நிலையான வைப்புக்களை ஆண்டின் போது காசாக்குதல் ஆகிய இரண்டின் தேறிய பெறுமதி முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சலுக்கு செம்மையாக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 22 ஆம் பிரிவின் பிரகாரம் தேறிய பெறுமதியின் அடிப்படையில் காசுப்பாய்ச்சல் செம்மயாக்காப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 42(b) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆன்டுகளில் பொருண்மையான தவறுகளை சரி செய்யும் போது முன்னைய ஆண்டிற்கான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மைகள் கணக்கின் ஆரம்ப மீதிகளை மீள ஸ்தாபித்தல் (Restating) செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அத்தவறு முறைப்படியாக சரி செய்யப்படாமையால் கடந்த 10 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் ரூபா 182,376,560 குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட வியாபார இருப்புக்களின் பெறுமதியானது கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு இணங்க பதியப்பட்டுள்ளது என தயவாகத் தெறிவிக்கிறேன். | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு இணங்க இறுதி இருப்பானது கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இறுதி இருப்பானது | இருப்பு சேதமடைதலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 சதவீத ஒதுக்கீடு இந்த அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படாது இன்று வரை காணப்பட்ட திரண்ட ஒதுக்கீடானது இருப்புக் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தினை விட நிகர தேறக்கூடிய பெறுமதி குறைவடைகையில் அந்த வித்தியாசத்தினை ஒரு செலவாக இலாபத்திலிருந்து பதிவழிக்கப்படுதல் வேண்டும். நியமத்திற்கு முரணாக வியாபார இருப்புக்களுக்கு இருப்பு சேதமடைதலுக்காக 15 சதவீதத்தினை ஒதுக்கீடு செய்தலாக பிழையான கணக்கீட்டு கொள்கை கடந்த ஆண்டுகளின் போது பின்பற்றப்பட்டிருந்தது. அப்பிழையான கணக்கீட்டுக் கொள்கை 2021 ஆம் ஆண்டின் போது பின்பற்றப்படாது இருப்பு சேதமடைதலுக்காக ரூபா 244,674,913 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது என குறிப்பு இலக்கம் 1.3.1.7 இன் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கில் பதியப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரியை கணிக்கும் செலவாகக் கருதி நடவடிக்கை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வங்கப்பட்டதனால் அதனை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கிறேன். | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களின் விளைதிறன் ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த எனினும் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 796,253,922 தொகையான சொத்துக்களின் மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | அம்பாறை மனைப் பொருள் கட்டிடத் தொகுதியில் ரூபா 114,258,780 பெறுமதியான 5465 விடயங்கள் தொடர்பான அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட | கருத்துரைகள் தரப்படவில்லை. | இருப்புக்களை பௌதீக மெய்மையாய்வு செய்ததன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| பொருள் இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்படாது நிதிக்கூற்றுக்களில் இறுதி இருப்பிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது. | | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் சட்டரீதியான குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளாது 2017 இலிருந்து 2021 வரையான 05 ஆண்டுகள் தொடர்பாக குத்தகை வாடகை வருமானமாக ரூபா 14,700,000 தொகை 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | கூட்டுத்தாபன தரப்பினர்கள் உடன்படிக்கையை தயாரித்து வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருந்தும் உடன்படிக்கை செய்தல் இடம்பெறாது இன்னும் நிர்ணயிக்கப்பட்ட அரசாங்க மதிப்பீட்டு குத்தகை செலுத்தாது இருப்பதாக தெரிவிக்கிறேன். | திணைக்களத்துடன் கலந்துரையாடி குத்தகையைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | குறுகிய கால மற்றும் நீண்டகால முதலீடுகளிலிருந்து பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 122,957,700 ஆக இருந்த போதிலும் ரூபா 124,495,091 ஆகக் காட்டியதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 1,537,391 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முதலீட்டு வட்டி வருமானத்தை கணிப்பீடு செய்த போது பெறவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,537,391 தாமத தவறினால் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனை 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்வதாக தெரிவிக்கிறேன். | சரியான வட்டி வருமானத்தை காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | விற்பனை முற்பணங்களிலிருந்து தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 103,246,849 தொகையை உடனடி விற்பனைகள் கட்டுப்பாட்டு கணக்கிற்கு வரவுவைத்ததனால் விற்பனை வருமானமும் விற்பனை முற்பணங்களும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | காசுக்கு விற்பனை செய்யும் கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்பட்ட ரூபா 103,246,849 தொகையான தீர்த்துவைக்கப்படாத இன்வொயிஸ்கள் உள்ளதுடன் அப்பெறுமதி காசுக்கு விற்பனைகள் முற்பணங்கள் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 131,176,540 ஆல் தீர்த்து சமப்படுத்த வேண்டியிருந்தது. | சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அம்பாறை பிராந்திய அலுவலகம், மனைப் பொருள் கட்டிடத் தொகுதி, மரம் அரியும் ஆலை, மரக் களஞ்சிய விடுதி என்பவற்றை உள்ளடக்கிய கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | i காணி உறுதி<br>ii உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள், ஆவணங்கள | இக்காணிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை எனவும் ஒட்டுப்பலகை சபையினால் 1991 இல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது எனவும் கோவைகளில் குறிப்பிடடப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக ஏனைய எந்த ஆவணமும் இருக்கவில்லை. காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு காணி உறுதி காணப்படுமாகவிருந்தால் அந்த ஆவணத்தை சமர்ப்பிக்குமாறும் உரிய நிறுவனத்துடன் கலந்தாலோசிக்குமாறும் முகாமைத்துவ சட்டத்தின் மூலம் பிராந்திய முகாமையாளர் அம்பாறை அவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2014 இலிருந்து 2021 வரை வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து பெறவேண்டிய கட்டிட வாடகை ரூபா 89,502,660 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பெற வேண்டிய குத்தகைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் அமைச்சு செயலாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டு | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அக்குத்தகைப் பணத்தை செலுத்துமாறு பாதுகாப்புத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மரம் வழங்குபவர்களுக்கு வழங்கிய முற்பணம் ரூபா 21,823,345 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 9,843,560 தொகை 02 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகளை மிகைத்த முற்பணமாகும். அவற்றினை தீர்த்துவைப்பதற்கு அல்லது அவை தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட வில்லை. | முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கும் அது தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மஹவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிடமிருந்து அறவிட வேண்டியவை ரூபா 1,731,821 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,661,488 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பழமையானவையாகும். | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக நீண்டகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அறவீடு செய்வதற்கான இயலுமை இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால் அக்கடனை பதிவழிப்பதற்காக 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் சிபாரிசினை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நாளதுவரையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய பணம் ரூபா 2,.588,632 ஆகும். அதில் 2 ஆண்டுகளை | வன பாதுகாப்பு திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட வேலைத்தளங்களின் மரங்களை வழங்குவதற்காக வீதிகளை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக இருந்ததுடன் ஒப்பந்தக்காரர்களால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மிகைத்த மீதி ரூபா 1,953,882 ஆகும். | வைப்புச் செய்யப்பட்ட பிணைப் பணத்தை விடுவிக்கும் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | அம்பாறை மனைப் பொருள் காட்சியகத்தில் கடன் விற்பனைகளிலிருந்து அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம் ரூபா 13,091,111 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 7,767,938 தொகை 02 ஆண்டுகளை மிகைத்திருந்தது. இக்கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வெளியிடப்படவில்லை. | கடனை நாளது வரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதுடன் அறவிடப்படாத கடனை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அம்பாறை பிராந்திய அலுவலக ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட பல்வேறு கடன் பணத்திலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடமுடியாத கடனின் பெறுமதி ரூபா 247,365 ஆகும். அவற்றிற்கு மத்தியில் 13 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளும் காணப்படுவதுடன் அக்கடன் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல காலமாக அறவீடு செய்ய முடியாத இக்கடன் மீதிகளை பனிப்பாளர்கள் சபைக்குச் சமர்பித்து பதிவழிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | அறவீடு செய்ய முடியாத கடனை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,136,211,699 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 47,119,129 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 1,183,330,828 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஆண்டிற்கான விற்பனைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,113,975,135 தொகையால் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீதத்தாலும் நிதி வருமானம் 18.7 சதவீததல்தாலும் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டு வருமானம் 74 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டிற்கான விற்பனைகள் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள் 6.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நிருவாகச் செலவுகள் 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 வீதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான நடைமுறை வீதம் 3.9 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26 சதவீத குறைவாக இருந்ததுடன் விரைவு வீதம் 3.2 சதவீதமாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8 சதவீத குறைவாகும். மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப வீதம் 48.3 சதவீதமாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீத அதிகரிப்பாக இருந்ததுடன் தேறிய இலாப வீதம் 26.2 சதவீதமாகும். அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 83.2 சதவீத அதிகரிப்பாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அம்பாறை மரம் அரியும் ஆலையில் 2021 ஆம் ஆண்டில் அரிந்த மரங்களாக மாற்றுவதற்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ரூபா 27,403,059 பெறுமதியான 1,061,904 டெசிமீற்றர் மரக்குற்றிகளில் 679,749 டெசிமீற்றர் அரிந்த மரங்கள் பூர்த்தி செய்யப்பட்டவையாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க மரத்தை பலகைகளாக மாற்றும் போது இடம்பெற்றுள்ள சேதமடைந்த மரம் ரூபா 542,719.17 கன டெசிமீற்றாக இருந்ததுடன் அது மொத்த மரங்களின் அளவில் 51 சதவீதமாக இருந்தது. மேலும் மரங்களை அரிந்த மரங்களாக மாற்றும் போது இடம்பெறக்கூடிய சராசரி சேதாரம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அவ்வாறு இடம் பெறக்கூடிய சேதாரங்களை கணிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் அந்த அளவினை மிகைக்குமாகவிருந்தால் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கல்தமுல்ல கட்டிட தொகுதியில் CCTV கமராவினைப் பொருத்தும் போது சரியாக திட்டமிடப்படாமையின் காரணமாக பிரதி முகாமையாளரின் அலுவலகத்திற்குள் பொருத்தப்பட்ட கமராவினை பிரதான பாதுகாப்பு நிலையத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ரூபா 275,000 தொகையான மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. | CCTV காட்சிகளைப் பார்ப்பதற்கு 02 தொலைக்காட்சிகள் ஸ்தாபிக்கப்பட்டன. பிரதான காவல் நிலையத்திற்கு அருகில் CCTV கமரா அத்தியவசியமானது என உறுதிப்படுத்தப்பட்டதுடன் மிகவும் பழுதடைந்த பலகைகளால் தயாரிக்கப்பட்ட காவல் நிலையத்திற்குப் பதிலாக | செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய திட்டத்தினை சரியாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | புதிய காவல் நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை முடிவடைந்திருந்ததனால் பிரதான காவல் நிலையத்திற்கு அருகில் ஒரு CCTV கமராவிற்கு அலுவலகத்தில் இருந்த தொலைக்காட்சி காட்சிப்படுத்தல் வழியை ஸ்தாபித்தல் பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டது. CCTV கமரா முறைமை பொருத்தப்பட்டுள்ள மனைப் பொருள் இயந்திரத்திலுள்ள பிரதான வாயிலுக்கு 250 மீற்றர் அளவான தூரம் உள்ளதனால் ஒரு Universal Cable 4 இரும்பு தூண்கள் என்பவற்றின் மூலம் இயந்திரத்திலிருந்து பிரதான வாயிலுக்கு CCTV கமராவும் காட்சிப்படுத்தல்' வழியும் பொருத்தப்பட்டது. | |
| (இ) | 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி பூஸ் கட்டிடத் தொகுதியில் நடாத்தப்பட்ட ஏல விற்பனையானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக முறைப்படியான ஏல விற்பனை சபை இல்லாது நடாத்தப்பட்டதனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 576,310 நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது புலனாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்கள் உரிய குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 576,310 நட்டத்தை அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதன் போது வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் எச்சரிக்கை செய்வதற்கு மாத்திரம் தெரியப்படுத்தப்பட்டது. புலனாய்வு அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கம் கோரப்பட்டிருந்ததுடன் நட்டம் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் மூலம் விளக்கத்தை கவனித்துப் பார்த்து பிரதி பொது முகாமையாளரின் (சந்தைப்படுத்தல்) சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளுமாறு அப்போதைய பொது முகாமையாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டது. உரிய ஆலோசனையின் பிரகாரம் மரக்குற்றி இருப்புக்களின் | நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விலையை குறைத்தல் மற்றும் அதிகரித்தலானது ஏல விற்பனைச் சபையின் தீர்மானம் என்பதனால் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) சிபாசிசு செய்திருந்தார். அதற்கிணங்க அப்போதைய ஒழுக்காற்று அதிகாரியான பொது முகாமையாளரால் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இறுதி இருப்பிற்குச் சேர்த்துக்கொள்ளப்படாத எனினும் மரக்களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள வன குற்றங்களாகக் கிடைத்த ரூபா 114,056,534 பெறுமதியான 1,112,166 கன டெசிமீற்றர் அரிந்த மரங்களும் ரூபா 65,601,485 பெறுமதியான 3,586,873 கன டெசிமீற்றர் அடங்கியுள்ள மரக்குற்றிகளும் காணப்பட்டன. அந்த மரங்கள் சம்பந்தமாக 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 422 ஆம் இலக்க நீதிமன்ற சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் மூலம் நீதிமன்றத்திற்காக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு நீதிமன்ற கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த மரங்களை விற்றுபெற்றுக்கொண்ட பணம் வழக்கு நடவடிக்கைகள் முடியும் வரை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு அல்லது அந்த மரங்களின் பெறுமதியை கணித்து இருப்பேடுகளுக்கு கொண்டு வருவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | 2018 ஒக்தோபர் 10 ஆந் தினகதிய 422 ஆம் இலக்க நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு வின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அம்பாறை மரக் களஞ்சியத்தில் அரசாங்கத்தின் காட்டு மரங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன் மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை | தற்பொழுது சந்தைப்படுத்துவதற்காக ஏலவிற்பனை இருப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. | விரைவாக சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 14,527 ஆகவும் அதன் மொத்த கன டெசிமீட்டர் அளவு 1,172,921 ஆகவும் இருந்தது. இந்த பழைய மரக்குற்றிகள் மிகக் கூடுதலாக அழிவடைந்துள்ளது என பௌதீக பரசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | மட்டக்களப்பு மரக்களஞ்சியத்தில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க காடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 17,636,441 பெறுமதியான 570,530 கன டெசிமீற்றர் தேக்கு மரங்கள் காணப்பட்டதுடன் அவை 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | மட்டக்களப்பு மரக்களஞ்சியத்தில் அரசாங்க காடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மரங்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து மிகுதியாக இருந்ததுடன் தற்பொழுது அந்த மரக்குற்றிகள் அனைத்தும் இருப்பாக அடுக்கிவைக்கப்பட்டு ஏல விற்பனைக்காக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விரைவாக சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்பாறை மரக்களஞ்சியத்தில் அன்பளிப்பாக கிடைத்த 400,808 கன டெசிமீற்றர் அளவான 3,040 மரக்குற்றிகள் காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் மரக்குற்றிகளும் காணப்பட்டன. அவை களஞ்சிய காணியில் இடத்துக்கு இடம் குவித்து வைக்கப்பட்டிருந்தது எனவும் அவை இத்துப் போய் காணப்பட்டது எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தற்பொழுது அன்பளிப்பாக கிடைத்த மரங்களில் அதிக அளவானவை விற்பனை செய்யப்பட்டுள்ளன. மிகுதியாக உள்ள மரங்களை விற்பனை செய்வதற்காக ஏலவிற்பனைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மரக்களஞ்சியத்தின் நிருவாக நடவடிக்கைகள் படிப்படியாகச் செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | அம்பாறை மரக்களஞ்சியத்தில் அரசாங்க காடுகளிலிருந்து கிடைக்கின்ற மரங்கள், அன்பளிப்பு மரங்கள், காட்டு குற்றங்கள் தொடர்பான மரக்குற்றிகள் என்பவற்றை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் வெவ்வேறாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மர களஞ்சிய காணியில் ஒழுங்குமுறையின்றி இடத்துக்கு இடம் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்த ஒவ்வொரு வகையான மரக்குற்றிகளும் கலக்கப்படும் வாய்ப்பு காணப்படுகின்றது எனவும் சில மரக்குற்றிகள் பல ஆண்டுகளாக காடுகளால் மூடப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அரசாங்க காடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற மரங்கள், அன்பளிப்புச் செய்யப்பட்ட மரங்கள், வனக்குற்றம் தொடர்பான மரங்கள் என்பனவாக தனித்தனியாக களஞ்சியப்படுத்துதல் இடம்பெறாததுடன் தற்பொழுது மரக்குற்றிகளை முறையாக தயார்படுத்தும் நடவடிக்கை செய்யப்படுகின்றது. | மரங்களை வகைப்படுத்தி பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அம்பாறை மரக்களஞ்சியத்தில் அரிந்த மரங்கள் களஞ்சியப்படுத்தியுள்ள 2 | பழைய அரிந்த மரக்களஞ்சிய கட்டிடத்தில் | கட்டிடத்தை திருத்தம் செய்து மரங்களை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்கள் மிகவும் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் கூரைகள் துருப்பிடித்து மழைக்கு நனையும் நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக மரங்கள் அழிவடையும் ஆபத்து காணப்பட்டது. மேலும் உற்பத்திச்சாலையின் மரக்களஞ்சியம் உடைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக பாதுகாப்பற்ற நிலை காணப்பட்டது. இக்கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருந்த அரிந்த மரங்கள் அகற்றப்பட்டன. அட்டிகளை கழற்றி அக்ற்றுவதற்குத் தேவையான அங்கீகாரத்திற்காக பொறியியல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய அட்டிகளைத் தயாரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அம்பாறை மரக்களஞ்சியத்தில் 2016 ஆம் ஆண்டில் 169 கன டெசிமீற்றரும், 2017 ஆம் ஆண்டில் 438 கனடெசிமீற்றரும், 2019 ஆம் ஆண்டில் 09 கனடெசிமீற்றருமாக மொத்தமாக 616 கனடெசிமீற்றரான ரூபா 415,757 பெறுமதியான கருங்காலி மர இருப்பு அரசாங்க மரக் கூட்டுத்தாபன உற்பத்திச் சாலைக்கு அல்லது தேசிய கைப்பணிச் சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்று களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது. | கருங்காலி மரத்திலிருந்து பரிமாற்றம் செய்யப்பட்ட உறுதியான சில மரத்துண்டுகளை யூஸ்ஸ களஞ்சியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மிகுதியான உறுதியான பகுதிகளிலிருந்து பரிமாற்றம் செய்யப்பட்ட மரத்துண்டுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் உதவி பொது முகாமையாளரால் (சந்தைப்படுத்தல்) 2022 மார்ச் 25 ஆந் திகதி ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | துரிதமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | லாகுல- மொரான 20 ஹெக்டயர்களில் மரங்களை பிடுங்கி அகற்றுவதற்காக அம்பாறை மாவட்ட வன அதிகாரிக்கும் கூட்டுத்தாபனத்தின் அம்பாறை பிராந்திய முகாமையாளருக்குமிடையே 2021 யூலை 05 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் வேலை முடிவுறுத்த வேண்டிய திகதி 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியாகும். எனினும் மரத்தை பிடுங்கி அகற்றுவதற்கு 2021 செப்தெம்ர் 17 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் செல்லுபடியாகும் கால எல்லை 2021 ஒக்தோபர் 15 ஆந் திகதியாகும். வன பாதுகாப்பு திணைக்களத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் 2021 செப்தெம்ர் 30 ஆந் திகதி வேலைத்தளம் ஒப்படைக்கப்பட | மொரன பக்மிடியாவ வேலைத் தளத்திலுள்ள மரங்களை பிடுங்கி அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட வெற்றியடைந்த ஒப்பந்தக்காரர் இணங்கிக்கொள்ளாததன் காரணமாக இரண்டாவது தடவையாக விலைமனு கோரி தெரிவு செய்யப்பட்ட வெற்றியடைந்த ஒப்பந்தக்காரருடன் 2021 செப்தெம்ர் 17 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. நாற்றுக்களை நடுவதற்குப் பொருத்தமான வகையில் வேலைத்தளத்தை | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வேலைத்தளத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 2022 சனவரி 20 ஆந் திகதி வரை வேலைத்தளம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | தயார்படுத்தி 2021 நவம்பர் 24 ஆந் திகதி வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன் மரக்குற்றிகளை களஞ்சியத்திற்கு வழங்குதல் 2022 சனவரி 25 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. | |
| (ஐ) | அம்பாறை உற்பத்திச் சாலையில் மீளாய்வாண்டின் போது உற்பத்தி வேலைகளுக்காக 86 மதிப்பீடுகள் கிடைத்துள்ளதுடன் அதில் 25 வேலைக்குத் தேவயான மரங்கள் முன்னைய வேலைக்காக வழங்கி மிகுதியான மரங்களைப் பயன்படுத்தி உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க மரக் களஞ்சியத்திலிருந்து உற்பத்திச்சாலைக்கு மரங்களை வழங்குவதற்காக முறையான நடைமுறை இல்லை எனவும் அவ்வாறான நிலைமையின் கீழ் உற்பத்திச் சாலையில் இடம்பெறுகின்ற சேதங்களை தவிர்த்துக்கொள்ள முடியாது எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | முறையான நடைமுறைக்கு இணங்க மரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | அம்பாறை உற்பத்திச்சாலையில் பூர்த்திசெய்த வேலைகளுக்காக (Job) 265,862 கன மெசிமீற்றர் அரிந்த மரங்கள் (Sawn Timber) களஞ்சியத்திலிருந்து வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் 319,233 கன டெசிமீற்றர் அளவிலான மரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் போது 35 உற்பத்தி வேலைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மரத்தேவைப்பாட்டினை மிகைத்து 02 சதவீதத்திலிருந்து 157 சதவீதம் வரையான வீச்சில் மிகையாக மரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது ஒட்டுமொத்தமாக 42 சதவீதத்தினை மிகைத்திருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | முறையான நடைமுறைக்கு இணங்க மரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | அம்பாறை உற்பத்திச்சாலையில் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 சனவரி வரை பிணைத்தல் வேலை பூர்த்தி செய்யப்படாது 35 கட்டளைகள் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிற்கு | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | விரைவாக வேலைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் செலவு குறைவடையும் வகையில் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | முன்பிலிருந்து பிணைத்தல் வேலை பூர்த்தி செய்யப்பட்ட எனினும் மெருகூட்டல் போடப்படாத ரூபா 109,587,380 தொகையான மனைப் பொருட்கள் 90 விடயங்களாகும். மேலும் பேருவளை பிரதேச சபையிடமிருந்து கிடைத்துள்ள ரூபா 4,254,200 தொகையான கட்டளைகள் அருகாமையிலுள்ள இயந்திர நிலையத்திற்கு ஒப்படைக்கப்படாது அம்பாறை இயந்திர நிலையத்திற்கு ஒப்படைத்ததனால் போக்குவரத்திற்காக அதிகளவு செலவு செய்ய வேண்டியிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | அம்பாறை உற்பத்திச் சாலையின் மனைப் பொருள் உற்பத்திக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பலகைகளில் 50 சதவீதம் அளவானவை மிகுதியாக இருந்ததுடன் அவற்றினை பயன்படுத்தி உப உற்பத்திகளை தயாரிப்பதற்கு ஈடுபட்டிருக்கவில்லை. இந்த மிகுதியாக உள்ள பலகைகள் பாதுகாப்பின்றி குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றினை பயன்பாட்டிற்கு எடுக்கும் நடைமுறை தயாரிக்கப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சேதங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (க) | உற்பத்தி இலக்கினை அடைந்துகொள்வதற்குத் தேவையான ரூபா 49.6 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டிலிருந்து வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் 2022 சனவரி மாதம் வரை அந்த இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | மீளாய்வாண்டில் அம்பாறை உற்பத்திச் சாலைக்கு கிடைத்திருந்த 86 வேலை ஒப்படைப்புக்களில் 05 வேலைகள் தொடர்பான பிணைத்தல் வேலைகள் சிறிய அளவிலும் 06 வேலைகள் தொடர்பான மெருகூட்டல் வேலைகள் சிறிய அளவிலும் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்களை ஈடுபடுத்தி நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் மிகுதியான அனைத்து வேலைகளும் தனியார் ஒப்பந்தக்காரர்களினால் நிறைவேற்றப்பட்டிருந்தன. 2021 ஆம் ஆண்டின் போது இந்த ஊழியர்களுக்கு ரூபா 8,984,905 சம்பளம் | -மேற்படி- | சேதத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்ததுடன் சிறிய வேலைகளின் கீழ் பிணைத்தல் வேலைகளுக்காக மாத்திரம் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 6,087,245 தொகையான வேலைக் கூலிகள் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க நிரந்தரப் பதவியணியினரின் செயலாற்றல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமாக சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (கி) | அம்பாறை மரக்களஞ்சியத்தின் இருப்பு பதிவேட்டிற்கு இணங்க 2012 ஆம் ஆண்டிலிருந்து இருப்பு காணப்பட்டதுடன் அந்த இருப்பு பௌதீகரீதியாக காணப்படுகின்றதா, அவ்வாறு இல்லாது அவை துருப்பிடித்துள்ளனவா என்பதனை இனங்காண முடியாதுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |
| (கீ) | உரிய காலத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாததன் காரணமாக சேதமடைதல் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களால் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பல்வேறு வகைகளான அரிந்த மரங்கள், ஏல விற்பனை மரங்களாக பகுதி பகுதியாக்கி விற்பனை செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 33,251,030 பெறுமதியான 124,928.75 கன டெசிமீற்றர் மரங்கள் 2022 சனவரி மாதமளவில் அம்பாறை மரக் களஞ்சிய கட்டிடத் தொகுதியில் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தன. | அந்த இருப்புக்கள் பௌதீக ரீதியாக காணப்படுகின்றன என குறிப்பிட்டிருந்ததுடன் சிறிய அளவில் துருப்பிடிப்பதற்கு உள்ளாகியிருந்தன. தற்பொழுது அந்த இருப்புக்கள் அனைத்தும் விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்பட்டு வருகின்றன. | விரைவாக ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கு) | அம்பாறை மரம் அரியும் ஆலையில் காணப்பட்ட ரூபா 7,136,534 தொகையான 366,112 கன டெசிமீற்றர் அளவான மரங்கள் அரிந்த மரங்களாக பரிமாற்றம் செய்யாது துருப்பிடித்துக் காணப்பட்டன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | துருப்பிடிப்பதற்கு இடமளிக்காது அரிந்த மரங்களாக மாற்றி விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கல்தமுல்ல மனைப்பொருள் கட்டிடத் தொகுதியின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு | பற்றாக்குறையாகக் குறிப்பிடப்பட்ட 48 மரக்குற்றிகளில் மூன்று | மீளாய்வுச் செயற்பாடுகளை சரியாகச் செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையின் பிரகாரம் ரூபா 736,400 தொகையான மனைப்பொருட்களின் 03 விடயங்கள் பற்றாக்குறையாகவும் 48 மரக்குற்றிகள் தொடர்பான ரூபா 429,125 தொகையான 13,520 கன டெசிமீற்றர் பற்றாக்குறையும் 31 மரக்குற்றிகள் தொடர்பாக ரூபா 401,789 பெறுமதியான 12,526 கன டெசிமீற்றர்களும் ரூபா 92,352 பெறுமதியான 1,528 கன டெசிமீற்றர் ஆக அரிந்த கமுகு மர இருப்பும் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மரக்குற்றிகள் மாற்றல் வழங்குதல்களின் கீழ் 2022-01-22 ஆந் திகதி புதிய களஞ்சியத்தினால் கல்தெமுல்லவிற்கு மாற்றி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதில் இரண்டு மரக்குற்றிகள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. மிகுதியான 43 மரக்குற்றிகள் தற்பொழுது களஞ்சிய தளத்தில் பாதுகாப்பாக உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் ஒரு மரக்குற்றி தற்பொழுது இருப்பேட்டிலும் இருப்பு மீளாய்வு ஆவணங்களிலும் மரக்குற்றியாகக் காட்டப்பட்டதுடன் களஞ்சிய காணியிலும் அம்மரக்குற்றி உள்ளது. மேலும் மிகுதியாக உள்ள 29 மரக்குற்றிகள் பரிமாற்றம் மற்றும் மாற்றல் வழங்குதலின் மூலம் ஏனைய களஞ்சியத்திற்கு அகுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் 3 மனைப் பொருள் உற்பத்திச் சாலைகளினால் 2021 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 395 ஆக இருந்ததுடன் அவற்றில் 99 கட்டளைகள் அல்லது 25 சதவீதத்திற்குச் சமமான அளவானவை ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 இலிருந்து அமுல்ப்படுத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்கு முரணாக ஒரு | இது கூட்டுத்தாபனத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்ற நடவடிக்கையாகும். 2006 | அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு இணங்க முறைப்படியான நிருவாக |

| | | | |
|---|---|---|---|
| | பிரதி பிராந்திய முகாமையாளர் பிராந்திய முகாமையாளர் பதவிக்கு 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்டிருந்தனர். இக்காரணத்தினால் அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 677,597 தொகை சம்பளமாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சனவரி 01 ஆந் திகதியிலிருந்து ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல் மற்றும் பதவியுயர்த்துதல் நடைமுறைக்கு முரணாக இடம்பெற்றுள்ளதுடன் இவ்வாறு பிழையாக தரப்படுத்தி பதவியுயர்த்துதல் மற்றும் ஆட்சேர்த்தல் அண்ணளவாக 439 இனங்காணப்பட்டுள்ளன. அவற்றினை சரிசெய்வதற்கு முற்படும் போது உருவாகிய நிறுவன ரீதியான தாக்கங்கள் தொடர்பாக அடிக்கடி கலந்துரையாடப்பட்டு பணிப்பாளர்கள் சபையின் ஆலோசனையின் பேரில் அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தீர்மானம் எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் ஆலோசனையின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் படி வெளித்தரப்பினர்களின் மூலம் ஊழியர்களை உள்ளீர்க்கும் நடைமுறையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் தீர்மானத்தை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | நடைமுறைகளைப் பின்பற்றி பதவியயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் ரொப்கில் வேலைத்தளத்தில் யுகலிப்டஸ் வகையான 2172 மரங்களை முழுமையாக தயாரிக்கும் போது இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்வதனை காலம் தாழ்த்தியமை மற்றும் குழு நிபந்தனைக்காக பொது இணக்கப்பாட்டிற்கு வராமையின் அடிப்படையில் விசாரணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் | சபையின் ஒழுக்காற்று கோவையின் ‘‘4 ஆம் அத்தியாயத்தில்’’ குறிப்பிட்ட ஒழுக்காற்று நடைமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதமடைந்துள்ளது. இதுவரை அந்த அறிக்கை கிடைக்கவில்லை என அறிவிக்கிறேன். இது சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அமைச்சின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் மூலம் அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதுடன் ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குதலும் ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாக தெளிவான தீர்மானம் பெற்றுக்கொள்வதற்குமாக பணிப்பாளர்கள் சபைக்கு பத்திரத்தினைச் சமர்ப்பிக்குமாறு தலைவரினால் தெரியப்படுத்தப்பட்டது. | |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடைமுறைகளை விளைதிறனாக்குவதற்காக திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதும் அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தாது வெளித்தரப்பினர்களால் உற்பத்தி செய்த ரூபா 511,875 பெறுமதியான அழகுசாதனப் பொருட்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்ததனால் அது கணக்காய்வின் போது சச்சரவுத் தன்மையான விடமாகும். | இதற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரம் மற்றும் கடமை ஒப்படைப்பு மற்றும் அறிவுறுத்தல்களுக்குரிய கடிதங்களும் அறிக்கைகளும் மாத்திரம் அரசாங்க கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் வருமானத்தை அதிகரிக்கும் குறிக்கோளில் மரத்திலான மனைப்பொருட்களை வெளி வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு தயாரிக்கப்பட்ட குழு அறிக்கைக்கு பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | அதிகாரச் சட்டத்தின் மூலம் அங்கீகரித்த பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

**..................................................................................................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| .................................................. | | ................................ | ................ |
| (அ) | பூஸ்ஸ மனைப்பொருள் காட்சிக் கூடத்தில் காணப்பட்ட | வாயு சீராக்கி இயந்திரங்களை திருத்தம் செய்வது சம்பந்தமாக | திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் |

| | | | |
|---|---|---|---|
| | 08 வாயு சீராக்கி இயந்திரங்களில் ரூபா 1,154,944 பெறுமதியான 07 வாயு சீராக்கி இயந்திரங்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டிருந்தும் அவற்றினை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடி மேலும் அந்த இயந்திரத்தினை பயன்பாட்டிற்குப் பொருத்தமான நிலைக்கு மாற்றுவதற்கான இயலுமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லையாயின் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 3,951,682 பெறுமதியான 71,989 கன டெசிமீற்றர் அளவுள்ள மர இருப்பு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது அம்பாறை மரக்களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து காணப்பட்டு வரும் 71,989 கன டெசிமீற்றர் அளவான மில்ல, SPU, மைக்ரோ கினிசப்பு, லுனுமிதல்ல, 1 ஆம் வகுப்பு, ஏனைய 3 ஆம் வகுப்பு சப்பு போன்ற மரங்களை உள்ளடக்கியிருந்தன. இவைகள் மனைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படாததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பழைமை வாய்ந்த இருப்பாகும். எனவே உரிய அரிந்த மரங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு இருப்புக்கள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. | உரிய காலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அம்பாறை மனைப் பொருள் காட்சியகத்தில் ரூபா 1,198,758 பெறுமதியான 33 பொருள் விடயங்கள் குறைபாடுள்ள பொருட்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் சில பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு 10 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | ஏலத்தில் விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட எஞ்சியுள்ள மனைப் பொருட்கள் மற்றும் குறைபாடுள்ள மனைப் பொருட்களாக பிராந்திய குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு விலைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தின் பின்னர் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள மனைப் பொருட்களாகும். | திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அம்பாறை பிராந்திய அலுவலகத்திற்கு 2010 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா 300,300 பெறுமதியான ஆணி, தகடு இருப்புக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது களஞ்சியத்தில் | ஒரு தனியார் காணியிலிருந்து மின்சார தூண்களையும் யானை வேலித் தூண்களையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்ததனால் அந்த தகடு, ஆணி இருப்புக்கள் களஞ்சியத்தில் | விரைவாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்திருக்கப்பட்டதுடன் அது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்திருக்கப்பட்டன. | |
| (உ) | அம்பாறை உற்பத்திச் சாலையில் 07 இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அவற்றை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அம்பாறை உற்பத்திச் சாலையில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து மனைப் பொருள் இருப்பு காணப்பட்டு வந்ததுடன் ரூபா 36,374,180 பெறுமதியான மனைப் பொருட்கள் பிணைத்தல் பிரிவில் காணப்பட்டன. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | வருடாந்த சராசரி விற்பனையை கருத்தில் கொண்டு உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது ஆண்டின் போது மேலும் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22,880,300 பெறுமதியான மனைப் பொருள் இருப்பு களஞ்சியத்தில் காணப்பட்டது. | -மேற்படி- | சிறந்த ஒரு திட்டத்துடன் மனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நீண்டகாலமாக முகாமைத்துவ மட்டத்தில் 91 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பதில் கடமைக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்தக்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தும் அரசாங்கத்தினால் அடிக்கடி ஆட்சேர்ப்புக்களைத் | அங்கீகாரத்தினைப் பெற்று ஆட்சேர்ப்பிற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தடைசெய்து வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் கொள்கைகளின் பிரகாரம் இன்று வரை ஆட்களை சேர்ப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. செயற்பாடுகளை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு அவசியமான பதவிகளுக்காக பதில்/ கடமையை நிவர்த்தி செய்தல் நியமனங்கள் வழங்கப்பட்டு கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன எனவும் ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் இந்நிலைமை சரிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கிறேன்.